பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதை ஒரு நாளும் மறந்துபோய்விடக்கூடாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால் நம்மிடம் தேவனுடைய குணாதிசயங்கள் காணப்படவேண்டுமல்லவா? அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார்: "இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்: நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" என்கிறார் (1யோவா.3:10). ஆகையால் "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:32). தேவன் நம்முடைய குற்றத்தை எப்படி மன்னித்திருக்கிறாரோ அப்படி நீங்களும் உங்களுடைய சகோதரருடைய குற்றத்தை மன்னித்து, மகத்துவமானவருடைய வழியில் செல்லுங்கள்.

## நடப்புச்செய்திகள்

- சிங்கப்பூரில் வசிக்கும் வெளிநாட்டவர்களில் 25 சதவீதம் பேர் இந்தியர்கள் என்பது தெரியவந்துள்ளது.
- ஆப்கானிஸ்தானில் உள்ள சுரங்கத் தொழிலில் ஈடுபட முன்வருமாறு இந்தியத் தொழிலதிபர்களுக்கு ஆப்கான் அழைப்பு விடுத்துள்ளது.
- தமிழகத்திலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத்தும் விரைவில் கணிணிமயமாக்கப்படும் என தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பூங்கோதை தெரிவித்துள்ளார்.
- ரயில்கள் மற்றும் ரயில் நிலைய கேண்டீன்களை ரயில்வேத்துறையே நிர்வகிக்க முடிவு செய்துள்ளது.
- மத்திய புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக சஹாபுதீன்யாகூப் குரேஷி நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஜெபியுங்கள்

- செப்டம்பர் மாதம் கொடைக்கானலில் நடைபெறவுள்ள ரிட்ரீட்டுக்காக...
- சபைவிசுவாசிகள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...
- புதிய வாசகர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும்....





# இயேசுவின் தாய் மரியாள்

## The mother of Jesus

*-S.Packyaselvi*

இவள் கிறிஸ்துவை பெற்றெடுக்கும் விஷயத்தில் ஏசயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டவள் ஏசா.7:14; மத்.1:21. ஆரம்பத்தில் சாராளிடம் கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? (ஆதி.18:14) என்று சொல்லப்பட்ட இந்த வார்த்தையே மரியாளுக்கும் அறிவிக்கப்பட்டது.

வேதாகமத்தில் உள்ள பெண்கள் அனைவரிலும் இவளே அநேக வாழ்த்துதல்களை பெற்றவள்

1. தூதன் மூலம் லூக்.1:28
2. எலிசபெத் மூலம் லூக்.1:42
3. எல்லா சந்ததியார் லூக்.1:48

தன்னை ஆண்டவருக்கென்று ஒப்புக்கொடுக்கும் மனம் இவளுக்கு இருந்தது. திருமணத்திற்கு முன் ஒரு பெண் கர்ப்பம் தரித்தால் அது சாதாரணமான விஷயம் அல்ல ஊராருடைய பேச்சுக்கள், வரப்போகும் கணவனுக்குத் தன்மேல் உள்ள நம்பிக்கை கெடுதல், வேசித்தனம் செய்கிறவள் என்ற பட்டம் இன்னும் அநேக அநேக பிரச்சனைகள் வரலாம் ஆனால் அதையெல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல், **“இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என்று கூறினாள்”** இந்த வார்த்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும் மனம் அவளுக்கு இருந்ததை உறுதிப்படுத்துகிறது. 2பேதுரு1:10-ல் உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாக இருங்கள் என்று கூறுகிறது. அவருக்கென்று தேவன் நியமித்திருக்கிற திட்டத்தை (கிறிஸ்துவைப் பெற்றெடுத்த) செய்ய தன் வாழ்க்கையை அர்பணித்தாள். நன்மையின் நிமித்தம் எத்தனை பாடுகள் வந்தாலும் அதை சகிக்க ஆயத்தமானாள் 1பேது.4:16.

**“இவளிடம் இருந்த மற்றொரு குணம் தன்னடக்கம்”** இவள் ஒருதடவை கூட தன்னை ஒரு பெரிய விசுவாசி என்றோ, பெரிய வரம் பெற்றவள் என்றோ, அவள் பேசியதாகவோ நடந்து கொண்டதாக தெரியவில்லை.

**இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் பாடம்:** இவளிடத்தில் காணப்படக்கூடிய ஒவ்வொரு நற்குணங்களும் ஒவ்வொரு கிறிஸ்துவ சகோதரிகளிடத்திலும் காணப்படவேண்டும். அவளுடைய பரிசுத்தமான வாழ்வினால் இயேசுகிறிஸ்து உலகத்தில் வர காரணமானாள். நம்முடைய நடக்கைளின் மூலமாக நம்மில் இயேசு கிறிஸ்துவை வெளிக்காட்டவேண்டும். மேலும் எவ்வளவு துன்பம் வந்தாலும் அவருடைய அன்பை விட்டு பிரிக்க முடியாத அளவிற்கு உறுதியாய் இருக்கவேண்டும்.

இப்படியே இருப்போமானால் நாமும் தேவனுடைய கிருபையை பெற்றவர்களாக இருப்போம் என்பதில் சந்தேகமில்லை. தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

## நீ யாரைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறாய்?

- பெரோயா பட்டணத்தார்களைப்போலவா? -அப்.17:11 ( அல்லது ) சோதோம் கொமோரா பட்டணத்தார்களைப்போலவா? -யூதா7
- மெலித்தா தீவார்களைப்போலவா? -அப்.28:2 ( அல்லது ) கிரேத்தாதீவாரைப்போலவா? தீத்.1:12
- இரண்டு காசுபோட்ட ஏழைவிதவையைப்போலவா? -லூக்.21:2 ( அல்லது ) ஒரு பங்கை வஞ்சித்துவைத்த அனனியா சப்பீராளைப்போலவா? -அப்.5:2
- நல்லபங்கை தெரிந்த மரியாளைப்போலவா? -லூக்.10:42 ( அல்லது ) மிகவும் வருத்தமடைந்த மார்த்தாளைப்போலவா? - லூக்.10:40
- ஊழியத்தில் பிரயோஜனமாயிருந்த மாற்குவைப்போலவா? -2தீமோ.4:11 ( அல்லது ) பவுலைவிட்டு பிரிந்துபோன தேமாவைப்போலவா? -2தீமோ.4:10

## வேதஅறிவுப்போட்டி எண் 119-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| S.தேவகிருபை ரூத் | -மங்களங்கொம்பு |
| K.மோகன் | -குமாரபாளையம் |
| Mrs.மரகதம் திரவியம் | -கோம்பை |
| N.ஜான்செல்லையா | -மதுரை |
| Sis.ரெபேக்காள் | -நாகமலைபுதுக்கோட்டை |
| G.பூங்கோதை | -வெள்ளப்பாளையம் |
| M.சுதாகர் | -ராசம்பாளையம் |
| A.இருதயராஜ் | -பாண்டி |
| V.F.ஷர்லோ | -பாண்டி |
| R.பவுல் சாமுவேல் | -பிடாரியூர் |
| R.அருண்குமார் | -பிடாரியூர் |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| T.ராஜாத்தி | -கோம்பை |
| R.சரோஜா | -தென்கலம் |
| J.ஐசக் | -வண்ணார்பேட்டை |
| R.கஸ்தூரி | -ஒட்டாநத்தம் |
| M.இராமச்சந்திரன் | -ஒட்டாநத்தம் |
| R.கிப்டராஜாமணி | -ஒட்டாநத்தம் |
| Sis.குளோரி பௌல்ஜர் | -சென்னை |
| N.கமலவேணி | -சென்னை |
| Bro.ராயன் | -பெங்களூரு |

## வேதஅறிவுப்போட்டி எண் 119-ன் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | 40 நாள் | -1சாமு.17:16 |
| 2. | தேவன் | -கொலோ.1:12 |
| 3. | 3000பேர் | -நியா.16:27 |
| 4. | பவுல் | -பிலி.3:6 |
| 5. | ஆதாம் | -யோசு.3:16 |
| 6. | முதலாங் கற்பனையாயிருக்கிறது | -எபே.6:3 |
| 7. | வெட்கப்பட்டுப்போவதில்லை | -சங்.119:6 |
| 8. | எருசலேமுக்கு | -கலா.4:25 |
| 9. | ஒன்றுமில்லை | -பிர.1:9 |
| 10. | பவுல் | -2கொரி.13:7 |

## பொது அறிவுச் சோதனை

1. ஆபிரகாம் லிங்கன் செய்த சீர்திருத்தம் எது?
அ) நிலசீர்திருத்தம் ஆ) நிறவெறி ஒழிப்பு இ) அடிமைத்தன ஒழிப்பு
2. மின்சார சக்தியை சேமிக்கப் பயன்படுவது எது?
அ)எலக்ட்ரோ மீட்டர் ஆ) அக்யூமுலேட்டர் இ) அம்மீட்டர்
3. இரும்புச் சத்து குறைவால் வரும் நோய் எது?
அ) அனிமியா ஆ) காய்ட்டர் இ) ஸ்கர்வி
4. சில பிராணிகள் செயலற்றிருத்தல் எந்த காலத்தில் நடைபெறும்?
அ) கேடைகாலம் ஆ) வேனிற்காலம் இ) குளிர்காலம்
5. விமான நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த வகையான சுகாதார கேடு விளைகிறது?
அ) கதிரியக்கம் ஆ) சப்தம் இ) காற்று

விடைகள்:
1. அடிமைத்தன ஒழிப்பு
2. அக்யூமுலேட்டர்
3. அனிமியா
4. வேனிற்காலம்
5. சப்தம்

சரித்திர ஆய்வு

# "நீங்கள் தேவர்கள்"

"... உன்னதமானவரின் மக்கள்..." சங்.82:6

## "Ye are gods"

"Children of the most High" Ps.82:6

John S.Nathan,
Gospel Minister
Mobile: 94444 43378

**தேவன் விரும்பி, தங்கி, ஆசீர்வதிக்கும் குடும்பம்**

தேவமக்களை தம்மைப்போலவே உண்டாக்கி அவர்களை, அவரால் படைக்கப்பட்ட அனைத்தையுமே **ஆளக்கடவர்கள்** என்ற அதிகாரத்தை அளித்தார் ஆதி.1:26). பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் **ஆண்டுகொள்ளுங்கள்** என்று சொல்லி, தேவன் அவர்களை **ஆசீர்வதித்தார்** வசனம்28 மனிதனின் தேவை உலகமும், அழியக்கூடிய உலகத்தில் உள்ளவைகள் அல்லவே அல்ல. இன்றும், என்றும் நம்முடைய தேவை, தேவனளிக்கும் அவரின் அளவற்ற இக.பர **ஆசீர்வாதமே!** பரலோகபிதாவானவர் நம்மை **கிறிஸ்துவுக்குள்** உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார் (எபே.1:3) ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார், இனியும் ஆசீர்வதிப்பார்.

அவரளிக்கும் ஆசீர்வாதங்கள் முற்காலத்திலும், எக்காலத்திலும் நிறைவானதும் பரிபூரணமானதுமாகவே அமையும். "கர்த்தர் நம்மையும் நமக்கு அவசியமான நல்வாழ்வதனை அளித்திடவே எப்போதும் நம்மை மறவாமல் நினைத்துக் கொண்டிருக்கிறார் (ஏசா.49:15,16). ஏனெனில் நாம் ஆசீர்வாதமாய் வாழ்ந்திடவேண்டுமென்ற நல்லெண்ணத்தினால் எனவே இன்றைய உலகமக்களின் அத்தியாவசியமான, அவசரமான தேவை பொன் பொருள், ஆடு, மாடு, நிலம், ஆஸ்தி, அந்தஸ்து அறிவு, செல்வம், செல்வாக்கு வெற்றி, ஞானம், கல்வி, நீண்டஆயுள் போன்றவைகள் அல்லவே அல்ல. இன்றைய அவசரமானதேவை அவரளிக்கும் ஆசீர்வாதம், ஆசீர்வாதமே! நம்மை தேவன் ஆசீர்வதித்தால், நமக்குத்தேவையான மற்ற எல்லாமே என்றும், எப்பொழுதும் ஏராளமாக நம்மை தொடர்ந்து வந்துசேரும் (மத்.6:33). நமது ஆத்தும இரட்சிப்புக்காக நம்முடைய பரலோக பிதாவானவர், தம்முடைய **ஒரேபேரான குமாரனை** நமக்கு பதிலாக சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட நம் நல்வாழ்விற்கு தேவையான மற்ற எல்லாவற்றையும் (ஆசீர்வாதங்களை) நமக்கு அருளாதிருப்பது எப்படி? (ரோமர்8:32).

தேவன் நமகக்களித்த வாக்குறுதியான ஆசீர்வாதத்தை அளித்திட விரும்புவது நமக்களிக்கும் ஆசீர்வாதமே ஆதாரமாய் அமைந்துள்ளது. வாக்களித்தார் எப்போதும், என்றென்றும் வாக்குமாறாதவராகவே இருந்துவருகிறார் என்பது நமக்கு எல்லையில்லா இன்பத்தை அளிக்கிறது! இதனை எண்ணி, எண்ணியே நமதாதிபெற்றோர்களாகிய ஆதாம், ஏவாள் ஆகியவர்களுக்கு தாம் அவர்களுக்காகவே உண்டாக்கிய யாவையுமே முழுமையாகஆண்டுக்கொள்ளும் அதிகாரத்தை கொடுத்திடவே அன்பு தேவனானவர்மிகவும் விரும்பினார்.

அவ்விருவரில் யார், யாரை ஆளவேண்டும் என்ற கேள்விக்கு இடமேயில்லை! ஏனெனில் தேவனுக்கு மாத்திரமே அவர்கள்

கீழ்ப்படியபோதிக்கப்பட்டனர். தேவனால்சிஷ்டிக்கப்பட்ட இருவருமே விசேஷமானவர்களானதினால் இருவருமே. ஒருவருக்கொருவர் கீழ்ப்படியவும் (எபே.5:21) போதிக்கப்பட்டனர். எனவே ஆதாமின்றி ஏவாளில்லை. ஏவாளின்றி ஆதாமில்லையே! அதுவுமல்லாமல் ஆதாம். ஏவாளை அதிகாரம் செலுத்தவோ. அல்லது அடிமை படுத்தவோ அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர்களிருவருமே தங்ளை உயர்வாக கருதிடாமல் தேவனுக்கு முதலிடம் அளித்து (ஏதேனிலிருந்து வெளியே அனுப்பப்படுவதற்கு முன்) தங்கள் முழு மனதுடன்அன்புகூர்ந்தும் கீழ்ப்படிந்தும் வாழ்ந்தனர் (லூக்.10:27). ஏனெனில் அவர்கள் இருவரல்லர் இருவருமே ஒரே சரீரமாய். மனதால் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தியும் கீழ்ப்படிந்தும் வாழ்ந்திடும் திட்டத்தை செயலாற்றினர். ஏனெனில் அவர்கள் தேவசித்தத்தை (எபே.5:17) அறிந்தும் கீழ்ப்படிந்தும் வாழ்ந்தனர் (வசனம்21).

உலகெங்குமுள்ள **கிறிஸ்தவ** குடும்பத்திலே கீழ்ப்படிதலும். அன்பு கூருதலும் ஆண்டு இருந்ததால் எந்த ஒருகுடும்பமும் **பிரிந்திருக்கவோ. துக்கப்படவோ. குறைவுபடவோ**இடமில்லையே!

**கிறிஸ்தவ** குடும்பத்திலே கீழ்ப்படிதலும். அன்புகூருதலும் ஆட்சிசெலுத்தாததினால். இருவரும் தினமும் ஜெபத்திலே அவரை தேடினால் விசுவாசத்தோடு ஜெபித்தால் அக் குடும்பம் இறுதிவரை உறுதியாக. ஒன்றாகவே சேர்ந்து வாழலாம். அக்குடும்பம் பரலோக வாழ்விற்கு .ஒரு நிழலாய் உலகமக்களிடையே. ஒரு முன்மாதியான எடுத்துக்காட்டாய் விளங்கும். இதற்காகவே தேவன் முதன் முதலில். முதலாவதாய் ஒன்றாய் இருக்க உண்டாக்கப்பட்டது (படைத்தது) தொழிற்சாலையோ. மருத்துவமனையோ. மற்ற எதனையோ உண்டாக்காமல் **"குடும்பத்தை"** ஏற்படுத்தினார்! கணவன். மனைவி தேவனுக்கு கீழ்ப்படிந்தால். மற்றவர்கள் நமக்கு கீழ்ப்படிய வேண்டுமென்ற குறுகிய எண்ணம் உண்டாகாதே.ஏனெனில் அவர்களிடையே தெய்வீக அன்பே (AGAPAO) ஆட்சிசெலுத்தியும்! மனித ஆதிக்கம் இரண்டகம் அதிகாரம் அங்கு தலை காட்டாதே! ஆதலால் அவர்கள் தனக்கென வாழாமல் பிறருக்காவே. ஒருவருக்கொருவர். மன்னித்து. விட்டு கொடுத்து வாழவிரும்பினால் மேலான வாழ்வு வாழ்ந்திடமுடியுமே!( முன்மாதிரியான அவர்களின் வாழ்வினால் உலகமக்களே பரவசமடைவார்கள்!

**<u>பக்தியுள்ள புத்தியுள்ளகுடும்பம்:</u>**

**பக்தியுள்ள குடும்பம்:** பிரியமான சகோதரர்களே! சகோதரிகளே இவ்வுலகில் நீண்ட நெடுங்காலம் வளமுடன். சுகமுடன் வாழவிரும்பினால் இது மிகவும் லேசானதுதான். எப்படியெனில் தேவனுக்கு கீழ்ப்படிந்து. ஒருவருக்கொருவர் பிரியமாய். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒப்புக்கொடுத்து வாழவிரும்பினாலே தேவன் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றிட நித்தமும் உதவுகிறார். ஆபிரகாம் தன் மனைவிக்கு கீழ்ப்படிந்ததைப்போல (ஆபிரகாமே) சாராள் உனக்குச் **சொல்வதெல்லாவற்றையும் கேள்"** (ஆதி21:12). இப்படியே ஒவ்வொரு கிறிஸ்த கணவரும் தன் **அன்பு மனைவிக்கு** கீழ்ப்படிந்தால் ஆபிரகாமின் ஆசீர்வாதம். விசுவாசம் நமக்கும் கிடைக்கும். இவ்விசுவாசத்திலே நீ (நீதிமான்) பிழைக்க முடியுமே! தேவனின் **சித்தத்தை** அறிந்து அதன்படி

விசுவாசித்து நடப்பதே பக்தியுள்ள குடும்பத்திற்கு இலகுவானதும். ஏற்றதுமாகும். போற்றக்கூடியதுமாய் அமையும்.

**புத்தியுள்ள குடும்பம்:** குடும்பமென்றாலே ஒருவரை ஒருவர் பேணி. புரிந்து பராமரித்து. காப்பாற்றி. சுக. துக்கங்களை இருவருமே சமமாய் பகிர்ந்து ஏற்று. விட்டு கொடுத்து வாழும் தியாக வாழ்வேயாகும். இவர்களின் குடும்பத்தில் **ஆசீர்வாதங்களுக்கு** ஒருபோதும் குறைவே காணப்படாது! இவர்களிடையே தான். ஒருவரையொருவர் "CAREING" காக்கும் என்கிற நற்பண்பு அமைந்திருக்கும் இப்பண்பிற்கு ஊக்கதொகையாக (BONES) "SHAREING" தோன்றிடும். அவைகளிக்கும் இன்னொரு ஈவு பிரச்சனையோ. கூச்சல் குழப்பமோ. வாக்குவாதமோ. சண்டையோ. பிரிவினையோ என்றுமே காணமுடியாது! இவர்களிடையே மனவருத்தமோ. பகையோ காணமுடியாது. இவர்கள் சேர்ந்து ஜெபிப்பதால் என்றும் சேர்ந்து வாழ்ந்திட இயலும். கணவன் மனைவியை ஒருபோதும் பிரிந்து வாழ்ந்திடக்கூடாது. அப்படியே சகோதரிகளும் இதனால்தான் பவுலடியார் பிசாசிற்கு இடம் கொடாமல் கணவன். மனைவி சேர்ந்து வாழுங்கள் என்ற ஆலோசனை மிகவும் ஏற்புடையதாய் உள்ளது. மத்.18:19.20 வசனப்படி ஒன்றுகூடி ஜெபிக்கும் குடும்பம் என்றுமே பிரிக்க முடியாத. சேர்ந்துவாழ்ந்திடும் குடும்பமாக விளங்கும். **கிறிஸ்துவும்** அவர்களோடேகூட இன்புற்று வாழ்ந்திட விரும்புகிறார். அவர்கள் ஒருகுறைவுமின்றி எல்லா இவ்வுலக நல்வாழ்வினை நாளும் பெற்று வாழலாம். ஏனெனில் நாம் விசேஷமானவர்கள் (மத்.6:26). நாம் சாதாரணமானவர் அல்ல. நாம் அசாதாணமனவர்கள்! EXTRAORDIANARY ஆம் நாம் கைவிடப்பட்டவர்கள் இல்லை (சங்.27:10). அநாதைகள் அல்ல (யோவான்14:18). நீர் கர்த்தரால். புதுநாமத்தால் அழைக்கப்பட்டவர். நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும். உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய். நீ இனிக் கைவிடப்பட்டவள் (கைவிடப்பட்டவன்) எனப்படாமல்... கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன்தேசம் வாழ்க்கைப்படும்" ஏசா.62:2-4.

***இயேசு இராசா என்னை ஆளும் நேசா என்று நாளும் பாடி மகிழ்ந்திடுவோம்***

**தற்சோதனையும் அதற்கான வேதாகம விடையும்**

- *நான் ஒரு விசுவாசியானால்...*
  *சபைகூடிவருதலை விட்டுவிடாதிருக்கவேண்டும்* -எபி.10:25
- *நான் ஒரு கிறிஸ்தவனானால்...*
  *கிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும்* -யோவா.15:4
- *நான் ஒரு ஊழியக்காரனானால்...*
  *சண்டைபண்ணுகிறவனாயிருக்கக்கூடாது* -2தீமோ.2:24
- *நான் ஒரு மூப்பனானால்...*
  *குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்கவேண்டும்* -தீத்.1:7
- *நான் ஒரு உதவிக்காரனானால்...*
  *என் குடும்பத்தை நன்றாய் நடத்த வேண்டும்* -1தீமோ.3:12



